ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2022 ஏப்பிறல் 29 |

**இலங்கை மத்திய வங்கி 2021ஆம் ஆண்டிற்கான அதன் ஆண்டறிக்கையை வெளியிடுகிறது**

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 35ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் எழுபத்திரெண்டாவது ஆண்டறிக்கையானது இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர். பி. நந்தலால் வீரசிங்க அவர்களினால் நிதி அமைச்சர் கௌரவ. எம்.யு.எம். அலி சப்ரி அவர்களுக்கு இன்று (2022.04.29) சமர்ப்பிக்கப்பட்டது.




[2021ஆம் ஆண்டறிக்கையினை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர். பி. நந்தலால் வீரசிங்க நிதி அமைச்சர் கௌரவ. எம்.யு.எம். அலி சப்ரி அவர்களுக்கு சமர்ப்பித்தார். திறைசேரி செயலாளர் திரு. கே.எம்.எம். சிறிவர்த்தன, இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் திரு. ஏ.ஆர்.கே. விஜயசேகர, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் முனைவர். பி.கே.ஜி. ஹரிச்சந்ர, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர்கள் முனைவர். (திருமதி) எஸ். ஜெகஜீவன் மற்றும் முனைவர். ஈ.டப்ள்யூ.கே.ஜே.பீ எஹலபொல ஆகியோரும் இந் நிகழ்வில் பங்கேற்றனர்]

**ஆண்டறிக்கையில் பிரதிபலிக்கப்பட்டவாறு 2021இன் இலங்கை பொருளாதார செயலாற்றத்தின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது:**

பல தசாப்தங்களாக ஆழமாக வேரூன்றிக் காணப்பட்ட அமைப்பியல் பிரச்சனைகள் மற்றும் பாதிப்படையக்கூடியதன்மைகள் முன்னிலைக்கு வெளிப்பட்டு அதன் மூலம் 2022 ஆரம்பத்தின் முன்னெப்பொழுதுமில்லாத வகையில் சமூக அரசியல் பதற்றங்கள் தோற்றுவிக்கப்பட்டதெனினும் 2020இன் உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட பொருளாதாரச் சுருக்கத்திலிருந்து இலங்கைப் பொருளாதாரம் 2021இல் மீட்சியடைந்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பக்கங்களில் பன்முகம் கொண்ட எதிரலைகளின் தாக்கத்திற்குட்படும் பொழுது பொருளாதாரமானது அதிர்வுகளுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய தாங்கியிருப்புக்களைக் கொண்டிராத ஏற்கனவே வலுவிழந்த நிலையிலிருந்தது. பொருளாதாரத்தின் இத்தகைய பாதிப்படையக்கூடியதன்மைக்கு 2019இன் பிற்பகுதியில் வரிக் கட்டமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களினால் மேலும் மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளியின் போதாமை பிரதானமாகப் பங்களிப்புச் செய்திருந்தது. உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முகம்கொடுப்பதற்கும் நீண்ட காலம் நிலைத்திருக்கும் பொருளாதாரச் சரிவு மற்றும் வாழ்வாதாரங்களில் வடுக்களின் தாக்கங்களை முன்கூட்டியே தடுப்பதற்கு பொருளாதாரத்தினைப் பாதுகாப்பதற்குமான எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உலகத்தில் இலங்கை விதிவிலக்கொன்றாக இருக்கவில்லை. எனினும், பொருளாதாரத்தில் காணப்பட்ட குறிப்பிட்ட பாதிப்படையக்கூடியதன்மைகளுக்கு மத்தியில் இறைத் துறையில் கொள்கை இடைவெளி போதுமற்றதாகவிருந்தமை அல்லது இறைத் துறையிலிருந்து நேரகாலத்துடனான பதிலிறுப்புக்களின்மையினால் நாணயக் கொள்கைத் தளர்த்தல், சந்தைகளுக்கும் அரசாங்கத்திற்கும் போதியளவு திரவத்தன்மையை வழங்குதல் மற்றும் பல்வேறு வெளிநாட்டுத் துறை மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகளினை நடைமுறைப்படுத்தல் வடிவங்களில் அசாதாரணமான பதிலிறுப்புக்களை வழங்கி பொருளாதாரத்தினைப் பாதுகாப்பதில் இலங்கை மத்திய வங்கி பெரிதும் ஈடுபட வேண்டியிருந்தது. மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட தீவிரமான பேரண்டப் பொருளாதாரத் தளர்த்தல் கொள்கைப் பொதியானது 2020இல் பதிவுசெய்யப்பட்ட வரலாற்று ரீதியான பொருளாதாரச் சுருக்கத்திலிருந்து 2021இல் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளித்த வேளையில் பரந்துபட்ட ஆர்வலர்களின் மீது உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினைத் தணிப்பதிலும் துணைபுரிந்தது. அரச மற்றும் தனியார் துறைகள் இரண்டும் தொழிற்படு மூலதனம் மற்றும் வியாபார முதலீட்டுக்கான தாழ்ந்த செலவுமிக்க நிதியின் சலுகைகளை அனுபவித்ததுடன் இது இந்த இக்கட்டான காலத்தில் அவற்றினைத் தொடர்ந்தும் இயக்குவதற்கும் கைத்தொழில்களை ஆற்றல்மிக்கதாக தக்கவைத்திருப்பதற்கும் சில வளர்ச்சியினை அவதானிப்பதற்கும் கூட துணைபுரிந்தது. மறுபுறத்தில்,


மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு நடவடிக்கை வாரியான பங்களிப்பு



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்


பொதுமக்களுக்கும் அதேபோன்று ஏனைய இன்றியமையாத நிரம்பல் சங்கிலிகளுக்கும் அரச பணிகள், பொதுப் பயன்பாடுகள் மற்றும் பொருட்கள் மற்றும் பணிகளின் தடங்கலற்ற வழங்கலை இது உறுதிப்படுத்தியது. எனினும், உலகளாவிய நோய்த்தொற்றின் உச்சமான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத கொள்கைப் பதிலிறுப்புக்கள், எதிர்பார்க்கப்பட்ட இறைப் பதிலிறுப்புக்கள் போதுமானளவு இடம்பெறாமையினால் கொள்கை வழிமுறைகளை மீளப்பெற முடியாதிருந்தமையுடன் இணைந்து புறக்கீடு செய்யும் வழிமுறைகளுக்கான இடைவெளி போதாமையினைத் தோற்றுவித்து 2021இல் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டில் சில எதிர்பாராத தாக்கங்களுக்கு இட்டுச்சென்றதுடன் இவை 2022 ஆரம்பத்தில் மேலும் தீவிரமடைந்தன. மேலும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை வற்றிப்போனதற்கு மத்தியில் செலாவணி வீதத்தில் அவதானிக்கப்பட்ட அழுத்தங்கள் 2021இலும் 2022 ஆரம்பத்தில் மேலும் தீவிரமடைந்து சமூகத்தின் மீது செலாவணி வீதத்தின் ஒரு பாரிய தேய்வடைதலின் பாதகமான தாக்கம் பற்றிய கரிசனைகளுக்கு மத்தியில் சந்தையில் நிலவிய மட்டத்துடன் ஒப்பிடுமிடத்து 2022 ஆரம்பத்தில் செலாவணி வீதத்தில் ஒரு திருத்தத்தினைத் தேவைப்படுத்தின. எனினும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய திரவத்தன்மை மீதான கணிசமான அழுத்தங்களையும் சந்தைத் திருத்தத்திலான தாமதத்தினையும் பிரதிபலித்து சந்தைச் சக்திகளின் பாரிய தேய்மானத்தின் காரணமாக 2022 மாச்சில் அனுமதிக்கப்பட்ட செலாவணி வீதத்தின் நெகிழ்ச்சித்தன்மை மீதான எதிர்பார்க்கை எதிர்பார்த்ததற்கு மாறாகவிருந்தது.

செலாவணி வீதமும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடும்





கடந்த தசாப்தத்திற்கு மேலாக பேரண்டப் பொருளாதாரத்தின் வலுவானதொரு தூணாக விளங்கிய விலை உறுதிப்பாடு உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிரம்பலினால் உந்தப்பட்ட காரணங்கள் மற்றும் போதுமானற்ற இறை இடைவெளிக்கு மத்தியில் முன்னெப்பொழுதுமில்லாத நாணய நிதியிடல் உள்ளடங்கலாக அசாதாரண நாணய வசதிப்படுத்தலின் பிரதான காரணமாக விலைகளின் மீதான மிதமிஞ்சிய கேள்வி அழுத்தங்கள் கட்டியெழுப்பப்படுதல் போன்றவற்றின் இணைந்த தாக்கத்தினால் 2021இன் இரண்டாம் அரைப்பகுதியிலிருந்து சவாலுக்குட்படுத்தப்பட்டது. மேலும், கணிசமான படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள் அதனுடன் இணைந்து வெளிநாட்டு செலாவணிச் சந்தை பெருமளவில் திரவத்தன்மையற்றதாகவுள்ள நிலையில் இன்றியமையாத இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்கான கடுமையான தேவைக்கு மத்தியில் அலுவல்சார் ஒதுக்குகளின் சொற்பமான மட்டத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு சென்மதி நிலுவைகள் மீது பெருகிவரும் அழுத்தங்களின் காரணமாக 2021இன் இறுதியிலிருந்து வெளிநாட்டுத் துறை ஆபத்தான நிலையின் விளிம்பில் தொடர்ந்துமிருந்தது. உடனடியாகத் தீர்க்கப்பட்டாலன்றி சக்தி மற்றும் வலுத் துறையிலான இக்கட்டான நிலையானது இன்றியமையாதவை மற்றும் மூலப்பொருட்களுக்கான கடுமையான பற்றாக்குறை மற்றும் பொருளாதாரத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் இவற்றின் கசிவுத் தாக்கங்கள் போன்றவை பொருளாதாரச் செயற்பாட்டினை மிதமிஞ்சியளவில் பாதிக்கக்கூடும். இத்தகைய தீவிரமான

முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்காண்டு)




துணைநில் வீத வீச்சு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட
சந்தை வட்டி வீதங்கள்





நிலைப்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் பிற்போடுவதற்கும் சிறிது சிறிதான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் கொள்கை வழிமுறைகளும் பயனற்றதாகவிருந்ததனை நிரூபித்துள்ளன அல்லது புதிய பிரச்சனைகளைத் தோற்றுவித்துள்ளன. வரலாற்று ரீதியில் உயர்வான பொதுப்படுகடன் மட்டங்கள், மேலும் வலுவிழந்துவரும் இறை மீதிகள் மற்றும் மிகவும் தாழ்ந்த நாட்டுக்கான தரமிடல் போன்றவற்றின் காரணமாக இத்தகைய உள்நாட்டுப் பொருளாதார நிலைப்பாடுகளை இலகுபடுத்தி வழமை நிலையினை மீளச் செயற்படுத்துவதில் இறை அதிகாரங்களின் குறிப்பிடத்தக்க ஏதாவது தலையீடு சாத்தியமற்றதாகவே தொடர்ந்துமிருக்கின்றது. இதனொரு விளைவாக, மத்திய வங்கியானது 2022 ஏப்பிறல் ஆரம்பத்தில் ஏனையவற்றிற்கு மத்தியில் நாணயக் கொள்கையின் கணிசமான இறுக்கமாக்குதலினூடாக பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு மேலும் நிலைகுலைவதனை முன்கூட்டியே தடுப்பதற்கும் விலை உறுதிப்பாட்டினை மீளநிலைநிறுத்துவதற்கும் விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இத்தகைய கொள்கை உந்துதல்கள் நீண்ட காலத்தில் அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கான அத்தியாவசியமான நிலைப்பாடாக தொடர்ந்துமிருக்கின்ற நடுத்தர கால மற்றும் நீண்ட கால பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை புத்துயிர் பெறச் செய்வதற்கு துணிச்சல்மிக்க அமைப்பியல் சீர்திருத்தங்களை ஆரம்பிப்பதற்கு இன்றியமையாததாகவிருக்கும்.

இறைத்துறை செயலாற்றத்தின் திரட்டு
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)





இந்த வகையில், மத்திய வங்கியின் பரிகாரக் கொள்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கு அரசாங்கத்தின் பல்வேறு அமைப்பியல் சீர்திருத்தங்கள் இந்த சந்தர்ப்பத்தில் இன்றியமையாததாகவிருக்கின்றன. நீண்ட காலமாக காலம் தாழ்ந்தப்பட்டதும் கடந்த காலத்தில் அடிக்கடி மீளப்பெறப்பட்டதுமான வலுவான இறைத் திருத்தங்களை நடைமுறைப்படுத்தல் தற்போதைய சிக்கலான பொருளாதாரக் குழப்பங்களிலிருந்து கண்கூடான திருப்புமுனைக்கு இட்டுச்செல்லும். அரசிறையில் மேல் நோக்கிய நிலைமாற்றத்துடன் அரச செலவினத்தின் சிக்கனப்படுத்தல் மற்றும் முன்னுரிமைப்படுத்தலினூடாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை நீடித்துநிலைத்திருக்கும் அடிப்படையில் மட்டுப்படுத்தப்படுதல் எதிர்வரும் காலத்தில் அரச கடன்பாட்டின் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதில் துணைபுரியும். மேலும், பொதுப்படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை அடைந்து கொள்வதற்கும் பேணிக் கொள்வதற்குமான அனைத்தையுமுள்ளடக்கியதும் ஒத்திசைவானதுமானதொரு அணுகுமுறை தற்போதைய பொருளாதாரப் பிரச்சனையைத் தீர்ப்பதில் முன்னெடுக்கப்படும் முக்கிய படியாகும்.

வெளிநின்ற மத்திய அரச படுகடன்
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)



இத்தகைய இன்றியமையாத இறைத் திருத்தங்கள் ஏனையவற்றிற்கு மத்தியில் செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் கட்டமைப்புக்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் நிதியியல் ரீதியாக சுயாதீனமானதும் சுயநிர்ணயம் கொண்டதுமான அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள், சிறந்த ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறும் பொறிமுறையினை நிறுவனமயமாக்குதல், ஒட்டுமொத்த பொதுத் துறையில் குறிப்பிடத்தக்க உற்பத்தித்திறன் மற்றும் பணிவழங்கலின் மேம்பாடு, மற்றும் நன்கு இலக்கிடப்பட்ட சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினை வலுப்படுத்தல் போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட வேண்டும். அரச நிறுவனங்களின் பொதுமக்களிற்கு பொறுப்புக்கூறும் கடப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு சட்டக் கட்டமைப்புக்களை வலுப்படுத்துவது அத்தியாவசியமாகின்ற அதேவேளையில் தொடர்புபட்ட நிறுவனங்கள் கொள்கை உருவாக்கத்திலும் நடைமுறைப்படுத்தலிலும் தற்போதுள்ள சட்ட அதிகாரங்களைக் கையாள்வது நாட்டில் நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதார நலனோம்புகையை உறுதிப்படுத்தும். இத்தகைய மாற்றங்கள் இலகுத்தன்மையுடன் தனியார் துறையின் அதிகரித்த பங்களிப்பினையும் அதேவேளையில் பொதுத் துறை பொருளாதாரத்தில் ஒருங்கிணைப்பாளரெனும் பங்கினை தொடர்ந்தும் வகிப்பதனையும் உறுதிப்படுத்தும்.

சென்மதி நிலுவை





இலங்கையினால் விடாப்பிடியாக முகங்கொடுக்கப்படும் இரட்டைப் பற்றாக்குறையெனும் இக்கட்டான நிலையானது ஒரு நீடித்துநிலைத்திருக்கும் அடிப்படையில் சென்மதி நிலுவைப் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தினைக் கோடிட்டுக் காட்டுகின்றது. மாறுகின்ற அரசியல் ஆட்சிகளுக்குட்படாததும் தொடர்புபட்ட ஆர்வலர்களினால் உருவாக்கப்படுகின்றதுமான வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையைக் குறைப்பதனையும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை முகாமை செய்யக்கூடிய மட்டத்தில் பேணுவதனையும் இலக்காகக் கொண்ட தேசிய கொள்கைகள் இந்த முயற்சிக்கு இன்றியமையாததாகின்றன. மேலும், அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு ஏனைய படுகடனை உருவாக்காத வெளிநாட்டுச் செலாவணியை உருவாக்குகின்ற மூலங்களைக் கண்டறிந்து கொள்வதும் நிறுவுவதும் அவசியமாகின்ற வேளையில் சென்மதி நிலுவைக்கு வெளிநாட்டுப் படுகடனினால் நிதியிடலினைக் குறைப்பது அவசியமாகும். வியாபாரம் செய்வதற்கு உகந்த சூழலை உருவாக்குதலும் வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஊக்குவிப்புக்களும் இந்த வெளிநாட்டுத் துறை உறுதிப்படுத்தல் பொதிக்கு ஆதரவளிக்க வேண்டும்.

இலங்கையில் அண்மையில் முகங்கொடுக்கப்பட்ட நிகழ்வுகள் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு, சமூக ஒருமைப்பாடு மற்றும் அரசியல் உறுதிப்பாடு போன்றவை எவ்வாறு ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்திருக்கின்றன என்பதனையும் ஓர் அம்சத்தின் தாக்கம் எவ்வாறு இன்னொன்றின் மீது கசிவுத் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனையும் வெளிப்படுத்துகின்றன. ஆகவே, இலங்கையினை புதிய உயரத்திற்கு மீள இயக்குவதற்கு தற்பொழுது நிலவும் பொருளாதார நெருக்கடி, சமூகக் கிளர்ச்சி மற்றும் அரசியல் உறுதிப்பாடின்மை போன்ற மும்முனையிலான நெருக்கடிக்கான ஒட்டுமொத்தத் தீர்வானது இந்த அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். கடப்பாடுகளின் ஒழுங்கானதும் ஒத்திசைவானதுமான மீள்கட்டமைப்பினைச் சார்ந்து இடைக்காலத்தில் வெளிநாட்டில் படுகடன் பணிக் கொடுப்பனவு செய்தல் அரசாங்கத்தினால் இடைநிறுத்தப்பட்டமை, பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து பொருளாதாரச் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினை வேண்டி நிற்றல், அரச செலவினத்தைச் சிக்கனப்படுத்துவதற்கும் அரசிறையை உயர்த்துவதற்குமானதொரு கடப்பாடு மற்றும்

பக்கச்சார்பற்ற அரசியல் மற்றும் பொருளாதார அரசியல் தந்திரம் உள்ளடங்கலாக பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் ஏனையவற்றின் மத்தியில் பேரண்டப் பொருளாதார உறுதியினை மீட்டெடுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய முயற்சிகளின் ஒட்டுமொத்த வெற்றியானது சமூக ஒருங்கிசைவினை மீள உறுதிப்படுத்துவதிலும் அரசியல் உறுதிப்பாட்டினை மீள உருவாக்குவதிலும் எதிர்வரும் காலத்தில் சீர்திருத்த நிகழ்ச்சிநிரலினை எடுத்துச் செல்வதற்கான நிரந்தரமான அரசியல் விருப்பத்திலும் தங்கியுள்ளது.


# தேசிய வெளியீடு, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை - 2021





நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி
ரூ.16,809 பில்லியன்
ஐ.அ.டொ. 84.5 பில்லியன்

நடுவாண்டுக் குடித்தொகை ('000 ஆட்கள்)
22,156

தலைக்குரிய மொ.உ.உற்பத்தி
ரூ. 758,680
ஐ.அ.டொ. 3,815




## உற்பத்தி அணுகுமுறை





**பணிகள்** 3.0% ↑
முக்கிய செலுத்தி: நிதியியல் பணிகளில் ஏற்பட்ட விரிவாக்கம்

**கைத்தொழில்** 5.3% ↑
முக்கிய செலுத்தி: தயாரிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம்

**வேளாண்மை** 2.0% ↑
முக்கிய செலுத்தி: எண்ணெய்ப்பசை கொண்ட பழவர்க்கங்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட விரிவாக்கம்

**மானியங்களை கழித்த வரிகள்** 4.9% ↑

## செலவின அணுகுமுறை




**தனியார் நுகர்வு** 10.8% ↑
முக்கிய செலுத்தி: உணவு மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு


**அரசாங்க நுகர்வு** 3.7% ↑
முக்கிய செலுத்தி: பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு

**மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்** 23.2% ↑
முக்கிய செலுத்தி: மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு

**தேறிய ஏற்றுமதிகள்** -31.6% ↓
முக்கிய செலுத்தி: உண்மைப் பெறுமதியில் இறக்குமதிகளின் அதிகரிப்பு

- பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் 23.3% ↑
- பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் 25.7% ↑

## வருமான அணுகுமுறை




**ஊழியர்களின் நட்டஈடு** 8.5% ↑


**மொத்த தொழிற்பாட்டு மிகை** 13.6% ↑
- தேறிய தொழிற்பாட்டு மிகை 14.0% ↑
- கலப்பு வருமானம் 11.9% ↑
- நிலையான மூலதனத்தின் நுகர்வு 12.4% ↑

**உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள்** 4.2% ↑

## தொழிற்சந்தை குறிகாட்டிகள்

| தொழிற்படை | பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலில்லாத குடித்தொகை | தொழிற்படை பங்கேற்பு வீதம் | தொழில்புரிவோர் குடித்தொகை | தொழிலின்மை வீதம் | வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கான புறப்பாடுகள் |
|---|---|---|---|---|---|
| 8.467 மில். (2020) | 8.273 மில். (2020) | 50.6% (2020) | 7.999 மில். (2020) | 5.5% (2020) | 53,711 (2020) |
| 8.553 மில். (2021) | 8.581 மில். (2021) | 49.9% (2021) | 8.114 மில். (2021) | 5.1% (2021) | 121,795 (2021) |


## சாதகமற்ற வலு விலை அபிவிருத்திகள்





உள்நாட்டு வலு விலை அசைவுகள்
(சன 2021-மார் 2022)

| | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | லங்கா இந்தியன் ஒயில் கம்பனி |
|---|---|---|
| பெற்றோல்92 | 85% | 121% |
| டீசல் | 69% | 106% |
| மண்ணெண்ணெய் | 24% | |
| | லிற்றோ | லாப்ஸ் |
| எரிவாயு | 79% | 181% |


## நீர்மின் வலு மீதான அதிகரித்த தங்கியிருப்பு




## அதிகரித்துவரும் இணையத்தள பாவனை




## மந்தமான போக்குவரத்து நடவடிக்கைகள்




## துறைமுக நடவடிக்கைகளில் மீட்சி

### துறைமுகத் துறையின் முக்கிய மைல்கற்கள்

**கொழும்புத் துறைமுக நகரம்**




- ✓ சட்டவாக்கங்கள்
- ✓ பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கான கடற்கரை உலாவுமேடை திறப்பு

**மேற்கு கொள்கலன் முனை**



- ✓ ஆண்டிற்கு 3 மில் டிஈயூ கொள்ளளவு
- ✓ 2026 இல் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது





சரக்குக் கையாளல் மெ.தொ.மில்


கொள்கலன் கையாளல் டி.ஈ.யூ.மில்

மாற்றிக் கப்பலேற்றல் டி.ஈ.யூ.மில்


## பாதிக்கப்படக்கூடிய வறுமை நிலைமை





## உலகளாவிய ரீதியில் பாராட்டப்பட்ட தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டம்



## விலைகள் மற்றும் கூலிகளின் அசைவுகள் - 2021








(அ) தளம்பலடையும் உணவானது அரிசி, இறைச்சி, உடன்மீன் மற்றும் கடலுணவு, தெங்கு, உடன் பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சுவையூட்டும் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்குகிறது.


(ஆ) ஏனைய உணவானது தளம்பலடையும் உணவுப் பண்டங்கள் நீக்கப்பட்ட ஏனைய உணவுப் பண்டங்களை உள்ளடக்குகின்றது.

(இ) குறிப்பிடப்பட்டுள்ள பெயரளவு மற்றும் உண்மையான கூலிகளின் மாற்றம் என்பது 2021 மற்றும் 2020 இன் சராசரிக்கு இடையிலான சதவீத மாற்றத்தைக் குறிக்கிறது.

(ஈ) கூலி நிர்ணய சபைகளினால் நிர்வகிக்கப்படுகின்ற முறைசார் தனியார்துறை ஊழியர்களின் கூலிகள்.



2021 இல் வெளிநாட்டுத்துறை உயர்ந்தளவிலான சவால்களை தொடர்ந்தும் எதிர்கொண்டது
-2.6%
-7.0%
-33.0%
ரூபாய் உயர்வு.(+)/தேய்வு.(-) வீதம்
2020
2021
2022 மாச்சு இறுதியில்
2021
-6.0%
+3.8%
+1.1%
பண்டங்களிலான வர்த்தகம் 2021 (ஐ.அ.டொ.பில்)
புடவைகளும் ஆடைகளும் 5.4
தேயிலை 1.3
இறப்பர் உற்பத்திகள் 1.1
பெற்றோலிய உற்பத்திகள் 0.5
ஏற்றுமதிகள்
3.1 அமெரிக்கா
3.0 ஐரோப்பிய ஒன்றியம்
0.9 ஐக்கிய இராச்சியம்
5.5 ஏனையவை
12.5
8.1 2021
6.0 2020 வர்த்தக பற்றாக்குறை
4.8 சீனா
4.6 இந்தியா
1.4 ஐக்கிய அரபு இராச்சியம்
0.8 மலேசியா
0.8 சிங்கப்பூர்
8.2 ஏனையவை
இறக்குமதிகள்
20.6
எரிபொருள் 3.7
புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் 3.1
பொறியும் கருவியும் 2.8
உணவும் குடிபானங்களும் 1.7
நடைமுறை கணக்கு பற்றாக்குறை கணிசமானளவு விரிவடைந்தது...
தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து பணிகளை பெற்றுக்கொள்ளல்
1.0 1.2
2020 2021
ஐ.அ.டொ.பில்
சுற்றுலா
0.7 0.5
2020 2021
ஐ.அ.டொ.பில்
2020 2021
ஐ.அ.டொ -1.2 பில்
ஐ.அ.டொ -3.3 பில்
நடைமுறைக் கணக்கு
போக்குவரத்து (தேறிய)
0.1 0.4
2020 2021
ஐ.அ.டொ.பில்
தொழிலாளர் பணவனுப்பல்கள்
7.1 5.5
2020 2021
ஐ.அ.டொ.பில்
நிதியியல் கணக்கில், தேறிய உறப்பட்டப் பொறுப்புகள் அதிகரித்த அதேவேளை தேறிய கையேற்புச் சொத்துக்கள் ஒரு குறிப்பிடத்தக்க குறைவினை பதிவு செய்தன...
2021 இன் உட்பாய்ச்சல்கள்
ஐ.அ.டொ.பில்
2.4 அரச கடன் பகிர்ந்தளிப்புகள்
1.75 பன்னாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல்கள்
0.8 வெளிநாட்டு நேரடி முதலீடு (கடன்கள் உள்ளடங்கலாக)
2021 இன் வெளிப்பாய்ச்சல்கள்
ஐ.அ.டொ.பில்
1.8 அரச கடன் தீர்ப்பனவுகள்
0.7 நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சி
0.4 இந்திய ரிசேர்வ் வங்கியின் பரஸ்பர பரிமாற்றல்கள்
0.2 கொழும்பு பங்கு பரிவர்த்தனை (தேறிய)
0.03 அரச பிணையங்கள் (தேறிய)
2021 ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் வெளிநின்ற வெளிநாட்டு படுகடன் மொ.உ.உ.இன் சதவீதமாக குறைவடைந்தது...
2020 ஐ.அ.டொ 49.0 பில்
2021 ஐ.அ.டொ 50.7 பில்
மொத்த அலுவல்சார் ஒதுக்கீடுகள்
2020 ஐ.அ.டொ 5.7 பில்
2021 ஐ.அ.டொ 3.1 பில்

## முக்கிய இறை மீதிகள் (மொ.உ.உ.இன் %)





## மத்திய அரசாங்க பாதீடு


2021
(2020)





## பற்றாக் குறைக்கான நிதியீட்டம்





## வெளிநின்ற மத்திய அரசாங்க படுகடன்






## முக்கிய சட்டவாக்கங்கள் 2021




## வெளிநின்ற மத்திய அரசாங்க படுகடன் (மொ.உ.உ.இன் %)




2021 ஓகத்துவரை மத்திய வங்கி மிகவும் தளர்த்தப்பட்ட ஒரு நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை பேணியது
வரலாற்றிலேயே குறைவான வட்டி வீதங்கள்
மேம்பட்ட திரவத்தன்மை
தனியார் துறைக்கான அதிகரித்த கொடுகடன்
கரிசனைகள்?
பணவீக்க அழுத்தங்கள்
30.2%
உணவுப் பணவீக்கம்
13.4%
உணவல்லா பணவீக்கம்
முதன்மைப் பணவீக்கம் மார் 2022
கொ.நு.வி.சு. (ஆண்டுக்காண்டு) 18.7%
வெளிநாட்டுத்துறை மற்றும் நிதியியல் சந்தைகளில் சமமின்மைகள்
INFLATION
தாழ்ந்த பொருளாதார வளர்ச்சி
பொருளாதாரத்திற்கு வழங்கப்பட்ட அசாதாரணமான ஆதரவினை மத்திய வங்கி மீளப் பெற்றுக்கொண்டது
முக்கிய கொள்கை வட்டிவீதங்கள்
900 அடிப்படைப் புள்ளிகள்
நியதி ஒதுக்கு விகிதம்
200 அடிப்படைப் புள்ளிகள்
தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் வழங்கல் பொருட்கள் மீதான உச்ச வட்டி வீதங்கள் நீக்கப்பட்டது
தாழ்ந்த மட்டங்களிலிருந்து சந்தை வட்டிவீதங்கள் அதிகரித்தன
ஓரிரவுத் திரவத்தன்மை
2021 இறுதியில்
ரூ. -366.3 பில்
நாணயக்கொள்கை வழிமுறைகள் நடுத்தரக் காலத்தில் பணவீக்க அழுத்தங்களை மட்டுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது
அரசிற்கான தேறிய கொடுகடன்
அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன்
ஆண்டிற்கான மாற்றம் (ரூ.பில்)
1,284
2021
186
1,752
2020
184
தனியார் துறைக்கான கொடுகடன்
விரிந்த பணம் $(M_{2b})$
2021 இறுதி
13.1
ஆண்டுக்காண்டு வளர்ச்சி (%)
13.2
810
ஆண்டிற்கான மாற்றம் (ரூ. பில்)
1,242
2020 இறுதி
6.5
ஆண்டுக்காண்டு வளர்ச்சி (%)
23.4


2021 இறுதியில் உள்ளவாறாக நிதியியல் துறையின் மொத்த சொத்துக்கள் ரூ.26.8 றில்
BANK
30
வங்கிகளின் மொத்த எண்ணிக்கை
மொத்த சொத்துக்கள் (%)
17.1
2020
15.4
2021
வைப்புக்கள் (%)
21.6
2020
13.7
2021
ஆண்டிற்கான வளர்ச்சி
வங்கித் தொழிற் துறையின் செயலாற்றம்
வங்கித் தொழிற்துறை
63%
மொத்த செயற்படாக் கடன்கள் விகிதம் (%)
2021 4.5
2020 4.9
நியதித் திரவச்சொத்து விகிதம் (%) உள்நாட்டு வங்கியியல் பிரிவு
33.8
37.8
மூலதனப் போதுமாந் தன்மை விகிதம் (%)
16.5
16.5
நிதியத்தின் மொத்த பெறுமதி (%)
12.1
2021
11.2
2020
ஆண்டிற்கான வளர்ச்சி
உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்)
2021 3,066.9
2020 2,767.8
ஊழியர் சேம நிதியம் மற்றும் ஏனைய ஓய்வுகால நிதியங்கள்
15%
118.2
2021
109.7
2020
மீளளிப்புக்கள் (ரூ.பில்)
ஊழியர் சேம நிதியத்தின் செயலாற்றம்
165.7
2021
150.7
2020
பங்களிப்புக்கள் (ரூ.பில்)
2021
2020
9.0%
அங்கத்தவர் மீதிகளுக்கு வழங்கப்பட்ட வட்டிவீதம் %
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகள் துறையின் செயலாற்றம்
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை
6%
மொத்த சொத்துக்கள் (%)
2021 6.1
2020 -2.2
ஆண்டிற்கான வளர்ச்சி
மூலதனப் போதுமாந் தன்மை விகிதம்(%)
2021 17.0
2020 15.7
மொத்த செயற்படாக் கடன்கள் விகிதம் (%)
2021 11.0
2020 13.9
சொத்துக்கள் மீதான வருவாய் (%)
2021 5.4
2020 1.7
காப்புறுதித் துறை
3%
27
காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை
2021 12.2
2020 9.7
மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் (%)
2021 11.4
2020 14.6
மொத்த சொத்துக்கள் (%)
ஆண்டிற்கான வளர்ச்சி
காப்புறுதித் துறையின் செயலாற்றம்

## பேரண்டப் பொருளாதார செயலாற்றம் (2017-2021)

| குறிகாட்டி | அலகு | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | 2021 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை (இ)** | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 3.6 | 3.3 | 2.3 (அ) | -3.6 (ஆ) | 3.7 |
| நடைமுறைச் சந்தை விலையில் மொ.உ.உ. | ரூ.பில் | 13,328 | 14,291 | 14,997 (அ) | 15,027 (ஆ) | 16,809 |
| தலைக்குரிய மொ.உ.உ. (ஈ) | ஐ.அ.டொ. | 4,077 | 4,057 | 3,848 (அ) | 3,695 (ஆ) | 3,815 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | |
| வர்த்தக நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -11.0 | -11.8 | -9.5 | -7.4 | -9.6 |
| நடைமுறை கணக்கு நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -2.6 | -3.2 | -2.2 | -1.5 | -4.0 |
| திரண்ட நிலுவை | ஐ.அ.டொ.மில் | 2,068 | -1,103 | 377 | -2,328 | -3,967 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | ஐ.அ.டொ.மில் | 7,959 | 6,919 | 7,642 | 5,664 | 3,139 |
| **இறைத்துறை (இ) (உ)** | | | | | | |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -0.7 | -1.2 | -3.6 (ஊ) | -7.9 | -7.7 |
| ஆரம்ப நிலுவை | மொ.உ.உ. இன் % | 0.02 | 0.6 | -3.6 (ஊ) | -4.6 | -6.0 |
| திரண்ட இறை நிலுவை | மொ.உ.உ. இன் % | -5.5 | -5.3 | -9.6 (ஊ) | -11.1 | -12.2 |
| மத்திய அரச படுகடன் (எ) | மொ.உ.உ. இன் % | 77.9 | 84.2 | 86.9 (ஊ) | 100.6 | 104.6 |
| **நாணயத்துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஏ) | % | 16.7 | 13.0 | 7.0 | 23.4 | 13.2 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (ஏ) | % | 14.7 | 15.9 | 4.2 | 6.5 | 13.1 |
| ஆண்டுச் சாராசரிப் பணவீக்கம் (ஐ) | % | 6.6 | 4.3 | 4.3 | 4.6 | 6.0 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உ மதிப்பீடுகளை (அடித்தள ஆண்டு 2010) அடிப்படையாகக் கொண்டது
(ஈ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(உ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2022 மார்ச்சு 29 கிடைக்கப்பெற்ற 2019 மற்றும் 2020ற்கான திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் அடிப்படையிலானவை
(ஊ) நிதியமைச்சின்படி, 2020 இற்கான வரவுசெலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதிற்கிணங்க 2019 இறைத்துறையின் புள்ளிவிபரங்கள் மீள்குறிப்பிடப்பட்டிருந்தன
(எ) 2013 மார்ச்சில் சிறிலங்கன் எயர்லைனசிற்கு முதலீடு வழங்குவதற்காக வழங்கப்பட்ட ரூ. 13,125 மில்லியன் (2018 யூன் 01 முதிர்ச்சியானது) மற்றும் 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய ரூ. 78,441 மில்லியன் (இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01 அன்று முதிர்ச்சியானதுடன் தற்போதைய வெளிநின்ற தொகை ரூ. 56,662 மில்லியனதாகும்) என்பவை உள்ளடங்கலாக
(ஏ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஐ) கொ.நு.வி.சுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்டது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி